# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 19 | வியாழக்கிழமை 03.04.2025 | கதிர் 170



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# மீளப்பெற முடியாத சமஷ்டி அதிகாரப் பகிர்வு: இணைந்த வடக்கு - கிழக்குக்கு வேண்டும்!

## முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மோடியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 03

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தப் பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குமாறு இந்தியப் பிரதமரிடம் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை இலங்கைக்கு வர இருக்கின்ற நிலையில் தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரி இந்தியப் பிரதமருக்கான மகஜரை யாழ். இந்திய தூதரகத்தில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினர் இன்று கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பையும் அவர்கள் நடத்தினர்.



உள்ளூராட்சித் தேர்தல் - 2025

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நாளை!




கொழும்பு,ஏப்.3

நடைபெறவுள்ள உள்ளூர் ஆட்சி அதிகார சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 7

## தேசபந்து தென்னக்கோனுக்கு ஏப்ரல் 10 வரை மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப். 03

பதவியிலிருந்து இடை நிறுத்தப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் 7



## வடக்கு இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்த இடமளிக்கக்கூடாது

### நீதி அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 03

"பல வருடங்களாகத் தொடர்ச்சியாக இழைக்கப்பட்ட அநீதிகள் காரணமாகவே, வடக்கு இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். எனவே, மீண்டும் அவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு இடம்கொடுக்காத வகையில் எமது செயற்பாடுகள் அமையவேண்டும்." - என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

## கடற்றொழில் அமைச்சரைச் சந்தித்த வடக்கு மீனவர் அமைப்பு பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஏப். 03

வடக்கு கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும் இடையிலான விசேட சந்திப்பு இன்று மாலை தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. 7



# பருத்தித்துறை வியாபாரிகள் இன்று பணிப்பகிஷ்கரிப்பு!

## மரக்கறிச் சந்தைக்கு நகர சபை பூட்டு

பருத்தித்துறை, ஏப். 03

பருத்தித்துறையில் இதுவரை இயங்கிவந்த மரக்கறிச் சந்தை பருத்தித்துறை நகர சபையால் பூட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இதுவரை இயங்கிவந்த மரக்கறி சந்தையை சுமார் 200 மீற்றர்கள் தொலைவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்துக்கு மாற்றுவதற்கான அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மரக்கறி வியாபாரிகள் வியாபாரத்தை பகிஷ்கரிப்பதாக அறிவித்திருந்த நிலையில் இன்று அதிகாலையில் இருந்து இயங்கி வந்த சந்தை கட்டடம் நகர சபையால் பூட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் வியாபாரிகள் தமது பொருட்களை பழைய சந்தைக்குள்ளிருந்து வெளியே எடுத்துவர முடியாத நிலையில் உள்ளனர். இதேவேளை, 7





# அஞ்சல் சேவையாளர்களுக்கு விடுமுறை இரத்து



கொழும்பு,ஏப்.3

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு அஞ்சல் திணைக்கள சேவையாளர்களின் விடுமுறை எதிர்வரும் திங்கட்கிழமை 07 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 06 ஆம் திகதி வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக, அஞ்சல் மா அதிபதி எஸ்.ஆர்.டபிள்யு. எம். ஆர்.பி. சத்குமார அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக புதன்கிழமை வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அஞ்சல் திணைக்களத்துக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலை உரிய முறையில் சட்ட ரீதியாக நடாத்துவதற்காக அஞ்சல் திணைக்களம் பாரிய கடமையை மேற்கொள்ள வேண்டியுள்ளதெனவும், தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களால் அஞ்சலுக்கு இடப்படும் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஒப்படைத்தல், அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பதிவு காப்புறுதி பைக்கட்டுக்கள் அஞ்சலுக்குக் கையளித்தல் மற்றும் வாக்குகளை எண்ணுதல் போன்ற நடவடிக்கைகளுக்காக சேவையாளர்களை நியமிக்கும் கடிதங்களை தாமதமின்றி ஒப்படைத்தல் மற்றும் வாக்காளர் அட்டைகளை வீடு வீடாகச் சென்று ஒப்படைத்தல் போன்ற சேவைகளை அஞ்சல் திணைக்களத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளதால் சகல ஊழியர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

தேர்தல் கடமை நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கு அவசியமென்பதால் அக் கடமைகளுக்காக சகல உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையாளர்கள் முன்னுரிமை வழங்க வேண்டுமென்பதுடன் அக் கடமைகளை பறக்கணித்தலை தவிர்த்துக் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

# அமெரிக்க புதிய வரி: ஆராய ஜனாதிபதி குழு

கொழும்பு,ஏப்.3



அமெரிக்க புதிய வரி முறை குறித்து அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை சமர்ப்பிக்க ஜனாதிபதியினால் குழு நியமனம் நியமிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு, வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் விதித்துள்ள புதிய பரஸ்பர வரியினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து ஆழமான ஆய்வு மேற்கொண்டு அரசாங்கத்திற்கு பரிந்துரைகளை சமர்ப்பிக்க ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

அதன்படி, நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், இலங்கை முதலீட்டு சபையின் தலைவர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர், வெளியுறவு அமைச்சின் பொருளாதார விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த /ஹலங்கமுவ, இலங்கை வர்த்தக சபையின் பிரதான பொருளாதார கொள்கை ஆலோசகர் ஷிரான் பெர்னாண்டோ, அஷ்ரப் ஒமர், ஷெராட் அமலீன் மற்றும் சைப் ஜெபர்ஜி ஆகியோர் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# கண்டியில் நாய்கள் ஏலம்



கொழும்பு,ஏப்.3

கண்டியில் உள்ள அஸ்கிரிய பொலிஸ் நாய்கள் தலைமையகத்தில் பயிற்சி பெற்றுஇ நீண்ட காலமாக திணைக்களத்தில் அதிகாரப்பூர்வ நாய்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிகாரப்பூர்வ நாய்களின் ஏலம், ஏப்ரல் 5 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை நடைபெறும் என்று நாய்கள் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஏலத்தில் 45 அதிகாரப்பூர்வ நாய்கள் விற்க திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் போதைப்பொருள், வெடிபொருட்கள் மற்றும் அவற்றின் வாசனையைப் பயன்படுத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் அதிகாரப்பூர்வ நாய்கள் இங்கு ஏலம் விடப்படும்.

அந்த அதிகாரப்பூர்வ நாய்களில், லாப்ரடோர் ரெட்ரீவர்ஸ், ஜெர்மன் ஷெப்பர்ட்ஸ், ரோட்வீலர்ஸ், அலாஸ்கன் மலாமுட்ஸ் மற்றும் டால்மேஷியன்கள் உட்பட பல்வேறு வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த உலகின் சிறந்த நாய்களில் 45 நாய்கள் அங்கு ஏலம் விடப்பட உள்ளன. (ஐ)



# அனுராதபுரம் பிரபஞ்சத்தின் சொத்து




கொழும்பு,ஏப்.3

நாட்டின் வரலாற்று சொத்தான அனுராதபுரம் புனித நகரத்தை பாதுகாப்பதற்கான யுனெஸ்கோவின் தலையீடு பாராட்டுதற்குரியது. அனுராதபுரம் இலங்கைக்கு மாத்திரமன்றி பிரபஞ்சத்தின் சொத்து என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டுள்ளார்.

பிரான்சிலுள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் ஏப்ரல் முதலாம் திகதி 'இலங்கையின் உலக மரபுரிமை சொத்தான அனுராதபுரம்புனித நகரத்தை பாதுகாப்பதற்கான ஒன்றிணைந்த மற்றும் நிலையான அணுகுமுறை' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற சர்வதேச நிபுணர்களின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் இணைந்து யுனெஸ்கோ ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டில், கலாசார மற்றும் வரலாற்று முக்கியத்தும்வாய்ந்த ருநேுளுஊழுஉலகமரபுரிமைசொத்தான அனுராதபுரத்தை பாதுகாப்பதற்கான நிரந்தர உபாய மார்க்கங்களை கலந்துரையாடும் வகையில் சர்வதேச நிபுணர்களின் பங்கேற்புடன் இந்த மாநாடு இடம்பெற்றது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் கலாநிதி ஹரிணி,

யுனெஸ்கோ மற்றும் இலங்கைக் கிடையிலான தொடர்புகள் 75 வருடங்களை அண்மிக்கும்தருணத்தில் யுனெஸ்கோ சர்வதேச மாநாட்டில் உரையாற்ற சந்தர்ப்பம் கிடைத்தமை மகிழ்ச்சியளிக்கிறது.

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும்கலாசார அமைப்பின்பணிப்பாளர் நாயகம் ஓத்ரி அசூலே அவர்கள் கடந்த ஜுலை மாதம் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் பிரதிபலனாக அனுராதபுரத்தை பாதுகாக்கும் வகையில் இந்த மாநாடு இடம்பெறுகிறது. யுனெஸ்கோ மற்றும் இலங்கைக்கிடையிலான நீண்டகால ஒத்துழைப்பை பலப்படுத்துவதற்கும், கலாசாரங்களுக்கிடையிலான உரையாடல், மரபுரிமைகளை பாதுகாத்தல், கல்வி, நிலைபேறான அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் இந்த மாநாடு கைகொடுக்கும்.

எதிர்கால சந்ததியினருக்கென கலாசார பாரம்பரியத்தை பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை பலப்படுத்துவதற்கு உலகளாவிய தலைவராக யுனெஸ்கோவின் ஒத்துழைப்பு இலங்கைக்கு முன்னரை விடவும் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படும் காலப்பகுதியில் நாம் உள்ளோம்.

கலாசாரத்திற்கென முன்னர் இல்லாத மகத்தான வரவேற்பைப்பெறுதல், உலக அமைதி, அபிவிருத்திக்கான அறிவுத்திறன் மற்றும் புத்தாக்கங்களை பயன்படுத்தல், யுஜ தொழில்நுட்பத்தை உயர் நெறிமுறைகளுடன் கையாளுதல், நிலைபேறான கல்வி, சமுத்திர உயிரியல் பல்வகைத்தன்மை மற்றும் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுக்கும் திறனை மேம்படுவதற்காக யுனெஸ்கோ எடுக்கும் நடவடிக்கைகள் மிகவும் முக்கியமானவை என்பதுடன் காலத்திற்கு ஏற்றவை.

கலாசார முக்கோணம் நிறுவப்பட்டுள்ள அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை இராச்சியங்களில் காணப்பட்ட மிகவும் முன்னேற்றகரமான நாகரிகம் மற்றும் இயற்கையை பாதுகாப்பதற்கு 1980களிலிருந்து யுனெஸ்கோவின் ஒத்துழைப்பு இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. எமது அரசு இனவாதத்தை புறக்கணிக்கிறது. அனைவருக்கும் சமமான உரிமைகளுடன் அனைவரையும் ஒன்றிணைக்கும் சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கே அரசாங்கம் முயற்சிக்கிறது. குரோத அரசியல் இலாபங்களுக்கு எதிராகவும், மக்கள் பிளவுபடுவதை விரும்பாதவர்களுமே இந்த தேசிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றியுள்ளனர்.

எதிர்காலத்தில் இலங்கையின் அனுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய 3 நகரங்களையும் தேசிய கலாசார நகரங்களாக அபிவிருத்தி செய்வதற்கு எமது அரசு திட்டமிட்டுள்ளது.

இதேவேளை மியன்மார் மற்றும் தாய்லாந்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் உருவாகியுள்ள பேரழிவுகள் தொடர்பில் அந்த நாடுகளின் அரசுகள் மற்றும் மக்களுக்கு இலங்கை ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாகவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டார்.

யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் ஓத்ரி அசூலே, இலங்கையின் புத்தசாசன, மதங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹிணிதும சுனில்செனவி உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினர் மற்றும் சர்வதேச நிபுணர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## விலங்குகளின் தரவுகளை பெறுவதில் குழப்ப நிலை

கொழும்பு,ஏப்.3

அண்மையில் நடத்தப்பட்ட பயிர் சேதப்படுத்தும் விலங்குகள் தொகைக்கான கணக்கெடுப்பின் தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவினர், விலங்குகள் தொகைக்கான தரவுகளைப் பெறுவதில் குழப்பத்தில் இருப்பதாக டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த சூழ்நிலையால் இறுதி முடிவுகள் அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்தக் குழு மார்ச் 28 அன்று விவசாய அமைச்சகத்திடம் ஒரு வரைவு அறிக்கையை ஒப்படைக்கவிருந்தது. இருப்பினும், போதுமான தரவுகள் பெறப்படாததால் அறிக்கையை சமர்ப்பிக்க முடியவில்லை.

டெய்லி மிரர் பத்திரிகையிடம் பேசிய மூத்த அதிகாரி ஒருவர், குழு உறுப்பினர்கள் மாவட்டங்கள் முழுவதும் தரவுகளைப் பெற்று வருவதாகக் கூறினார்.

அதன்படி, குழு இதுவரை எட்டு மாவட்டங்களிலிருந்து தரவுகளைப் பெற்றுள்ளது.

இருப்பினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பெறப்பட்ட சில தரவுகள் சிதைந்துள்ளதாகத் தெரிகிறது, மேலும் சிறந்த துல்லியத்திற்காக மீண்டும் சரிபார்க்கப்பட வேண்டியிருக்கலாம்.

மேலும், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இறுதி அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உட்பட பல பங்குதாரர்களின் குறிப்பிடத்தக்க விமர்சனங்களை மீறி நடத்தப்பட்ட இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு, பயிர் சேதத்திற்குக் காரணமான அணில், மயில்கள், காகங்கள், கிளிகள் மற்றும் குரங்குகள் போன்ற விலங்குகளை உள்ளடக்கியது.

இது மார்ச் 15 அன்று காலை 8.00 மணி முதல் 8.05 மணி வரையிலான ஐந்து நிமிட காலக்கெடுவிற்குள் நடந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





## மியன்மாருக்கு தலதா மாளிகை நிதி உதவி

கொழும்பு,ஏப்.3

நாட்டின்வரலாற்று சொத்தான அனுராதபுரம் புனித மியான்மரில் சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக இலங்கையின் ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் மல்வத்து-அஸ்கிரிய ஆலயங்கள் ரூ.15 மில்லியன் நிதி உதவியை வழங்கியுள்ளன.

நேற்று புதன்கிழமை (ஏப்ரல் 02), அஸ்கிரிய பீடத்தின் தலைமை பீடமான மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் அனுநாயக்க தேரர்கள், குழு உறுப்பினர்கள் மற்றும் மகா சங்கத்தினருடன், புனித தந்த தாதுவுக்கு அருகில் ஒன்றுகூடி பிரித் ஓதி ஆசீர்வாதங்களை வழங்கினர்.

ஸ்ரீ தலதா மாளிகையின் அறிக்கையின்படி, பேரழிவில் உயிரிழந்த உயிர்களை கௌரவிக்கும் வகையிலும், மியான்மர் மக்களின் நல்வாழ்வு மற்றும் மீட்சிக்காக பிரார்த்தனை செய்யும் வகையிலும் இந்த பிரார்த்தனை நடத்தப்பட்டது.

"ஆழமாக வேரூன்றிய தேரவாத பௌத்த பாரம்பரியத்தைக் கொண்ட நாடான மியான்மருடன் இலங்கை நீண்டகால மற்றும் நெருங்கிய உறவைப் பகிர்ந்து கொள்கிறது. இந்தப் பிணைப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், மியான்மரில் சமீபத்திய இயற்கை பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் மல்வத்து-அஸ்கிரி கோயில்கள் 15 மில்லியன் ரூபாய் நிதி உதவியை வழங்கியுள்ளன," என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த நன்கொடை, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் மற்றும் புனித தலதா மாளிகையின் தியவதன நிலமே ஆகியோரால் இலங்கையில் உள்ள மியான்மர் தூதரிடம் அதிகாரப்பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

# உங்கள் நாடகத்துக்கு சட்டசபையை பயன்படுத்தாதீர் முதல்வருக்கு அண்ணாமலை வேண்டுகோள்

"தயவு செய்து உங்கள் அரசியல் நாடகத்திற்கு சட்டசபையை பயன்படுத்த கூடாது" என முதல்வருக்கு அண்ணாமலை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தி.மு.க., கூட்டணி எம்எல்ஏக்கள் கருப்பு பேட்ஜ் அணிந்திருப்பதும், வக்ப் திருத்தச்சட்ட மசோதாவை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தை நாடுவதாக முதல்வர் ஸ்டாலின் அறிவித்தது எதிர்பார்த்தது தான். வக்பு மசோதா எதிர்ப்பு சிறுபான்மையினர் வாக்கு வங்கியை காப்பாற்றும் நாடகம்.

முந்தைய வக்பு சட்டத்தால் ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள் பாதிக்கப்பட்டதை தமிழக முதல்வர் உணரவில்லையா? தயவு செய்து உங்கள் அரசியல் நாடகத்திற்கு சட்டசபையை பயன்படுத்த கூடாது. முதல்வர் ஸ்டாலினின் தொடர்ச்சியான நாடகம், அடுத்த ஆண்டு தேர்தலுக்கு முன்பு'2025 வக்ப் மசோதாவை எதிர்க்க அப்பாவின் முயற்சிகள்' என்ற தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுத முடியும்.

இதை ஒரு தேர்தல் தளமாக்கி, 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தல் மற்றும் 2029ம் ஆண்டு லோக்சபா தேர்தல்களில் முஸ்லிம்களை தவறாக வழிநடத்தவும், ஏமாற்றவும்பிரிக்கவும்மட்டுமேதி.மு.க.,வுக்குத் தெரியும். இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார். (ஐ)





## மருதமலை அடிவார தியான மண்டபத்தில் வெள்ளிவேல் திருட்டு

மருதமலை அடிவாரத்தில் உள்ள வேல் கோட்டம் தியான மண்டபத்தில், ரூ.4 லட்சம் மதிப்பிலான வெள்ளிவேல் திருடு போனசம்பவம்பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கோவை மருதமலையில் சுப்பிரமணிசாமி கோவில் உள்ளது. இந்த கோவிலில் கும்பாபிஷேகம் நாளை (நடைபெற உள்ள நிலையில், பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. மருதமலை அடிவாரத்தில் உள்ள தனியாருக்கு சொந்தமான வேல் கோட்டம்தியானமண்டபம்உள்ளது. இதில் முருகனை வேல் ரூபத்தில் பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

இதில் மூலவருக்கு முன்பாக சுமார் 2 1/2 அடி வெள்ளியால் செய்யப்பட்ட, 4 லட்சம் மதிப்பிலான வெள்ளிவேல் உள்ளது. நாளை கும்பாபிஷேக நடைபெறும் நிலையில், நேற்று இந்த வெள்ளிவேல் திருடு போனது. சாமியார் வேடத்தில், சென்ற நபர் ஒருவர் வெள்ளிவேலை திருடிச் செல்லும் சி.சி.டி.வி., காட்சி வெளியாகி உள்ளது.

இதன் அடிப்படையில் வெள்ளிவேலைதிருடிசென்றநபரை பொலிஸார் தேடி வருகின்றனர். பலத்த போலீஸ் பாதுகாப்பை மீறி பட்டப் பகலில் மருதமலையில் வேலை திருடி சென்ற சம்பவம் பக்தர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. (ஐ)

## கிராம சுகாதார செவிலியர் பணி விவகாரம் அரசுக்கு சீமான் கடும் கண்டனம்

கிராம சுகாதார செவிலியருக்கான சிறப்புப் பயிற்சி பெற்ற 2,400 அங்கன்வாடி ஊழியர்களை, கிராம சுகாதார செவிலியராகப் பணி நியமனம் செய்ய கடந்த 4 ஆண்டுகளாக தி.மு.க., அரசு மறுத்து வருவது வன்மையான கண்டனத்துக்குரியது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: தமிழக சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் அங்கன்வாடி மையத்தில் பணியாற்றும் ஊழியர்கள், அங்கன்வாடி பணிகளோடு கிராமப்புறங்களில் உள்ள கர்ப்பிணிகள், பாலூட்டும்தாய்மார்கள்மற்றும்குழந்தைகள் நல மேம்பாட்டுப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அப்பணிகளில் கிராமப்புற செவிலியர்களுடன் அங்கன்வாடி ஊழியர்கள் ஒருங்கிணைந்து செயல்படும் காரணத்தினால், ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் அங்கன்வாடி ஊழியர்களைத் தேர்ந்தெடுத்து, 'அவர்களுக்கு 2 ஆண்டுகள் கிராம சுகாதாரச் செவிலியருக்கான சிறப்புப் பயிற்சியையும் தமிழக அரசு அளித்து வந்தது. அவ்வாறு சிறப்புப் பயிற்சிபெற்ற அங்கன்வாடி பணியாளர்களுக்கு கிராம சுகாதார செவிலியர் பணி நியமனத்தில் முன்னுரிமையும் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த 2021ம் ஆண்டு தி.மு.க., அரசு ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு, செவிலியர் பயிற்சி முடித்த அங்கன்வாடி ஊழியர்களைக்கிராம சுகாதார செவிலியராகப் பணி நியமனம் செய்வதை நிறுத்தி வைத்ததோடு, இனி தமிழக மருத்துவப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் மட்டுமே கிராம சுகாதாரச் செவிலியர்கள் நேரடியாக நியமனம் செய்யப்படுவார்கள் என்றும் அறிவித்தது. இதனால், கடந்த 2019ம் ஆண்டு முதல் கிராம சுகாதார செவிலியராகப் பயிற்சி பெற்ற 2,400 அங்கன்வாடி பணியாளர்களின் எதிர்காலம் இருண்டுபோயுள்ளது. அதுமட்டுமின்றி, அவர்கள் தங்கள் அங்கன்வாடி பணியையும், வருமானத்தையும் விடுத்து 2 ஆண்டுகள் சுகாதாரப் பயிற்சிபெறச் சென்றதால்



அங்கன்வாடி பணியில் கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வு, பதவி உயர்வு உள்ளிட்ட எவ்வித சலுகைகளும் கிடைக்கப்பெறாமல் தடைபட்டுப் போய்விட்டது. இதனால் செவிலியர் பயிற்சி முடித்த 2,400 அங்கன்வாடி ஊழியர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதோடு, அவர்களது குடும்பம் வறுமையில் வாடுகின்றது.

மேலும், கிராம சுகாதார செவிலியர்களை மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடியாக நியமனம் செய்ய முயன்ற தி.மு.க., அரசின் நடவடிக்கைக்கு எதிராக உச்சநீதிமன்றம் வரை சட்டப்போராட்டம் நடத்தி அங்கன்வாடி ஊழியர்கள் தடையாணையும் பெற்றுள்ளனர். இந்நிலையில் அவ்வழக்கினை காரணம் காட்டியே தமிழகம் முழுவதும் தற்போது காலியாக உள்ள 2,500 கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களை நிரப்பாமல் தமிழக அரசு காலம் தாழ்த்தி வருவது கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளின் நல்வாழ்வோடு விளையாடும் கொடுஞ்செயலாகும். ஆகவே, தமிழக அரசு தம்முடைய பிடிவாதத்தை இனியேனும் கைவிட்டு, செவிலியர் பயிற்சி பெற்ற 2400 அங்கன்வாடி ஊழியர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு, எவ்வித நிபந்தனையுமின்றி அவர்கள் அனைவரையும் உடனடியாக கிராம சுகாதார செவிலியராகப் பணிநியமனம் செய்து அரசாணை வெளியிட வேண்டும், இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



## சட்டவிரோதமாக தங்கி இருந்த வங்கதேசத்தினர் 8 பேர் கைது

புவனகிரியில் உரிய ஆவணங்கள் இன்றி தங்கி இருந்த, வங்கதேசத்தினர் 8 பேரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

கடலூர் மாவட்டம், புவனகிரி அருகே வண்டுராயன்பட்டு கிராமத்தில் உள்ள அரசு விதைப்பண்ணையில் புதிய கட்டடம் கட்டுமானப் பணி நடந்து வருகிறது. இந்த கட்டுமான பணியில் ஈடுபட்டு வந்த 8 பேர் மீது சந்தேகம் இருப்பதாக புவனகிரி போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன்படி, 8 பேரிடம் புவனகிரி போலீசார் விசாரணை நடத்தினர்.

விசாரணையில், மேற்கு வங்க மாநிலத்தை சேர்ந்த, முகமதுமிராட்அலி(32), முகமது அப்துல்லா(28), முகமதுஆரிப்கோசன் (29), முகமதுமினருல்ஹக்(18), முகமதுஷகில்அலி(20), முகமது ரோம்சன்அலி (20), முகமதுமிராசுல் இஸ்லாம்(26) மற்றும் அவல்ஷேக்(22) ஆகிய 8 பேர் போலி ஆதார் கார்டு பெற்று, பெற்று, உரிய ஆவணங்கள் இன்றி தங்கி இருந்து கட்டட வேலை செய்து வந்தது தெரியவந்தது.

8 பேரையும் கைது செய்த பொலிஸார் அவர்கள் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து, சிறையில் அடைத்தனர். (ஐ)



# காலம் எனும் வேகம்

அசையாமல் நிற்பது போலத்தான், நம்மால் அறிய முடிகிறது, ஆனால் "அசுர வேகத்தில்" நம்மை கடந்தும், கடத்தியும் கொண்டு போய்க்கொண்டு தான் இருக்கிறது.

இது விடுகதை கேள்வியை போல தோன்றினாலும், உண்மையில் இதற்கான விடை "காலம்" என்னும் ஒற்றை சொல்தான்.

நாம் இருக்கும் இந்த 'பூமி' பிறக்கும் போது நமக்கு புதிதாக தோன்றி நாட்கள் செல்ல, அறிமுகமான ஒட்டி உறவாடக் கூடியதான சூழ்நிலைக்கு கொண்டு வந்து அதே பூமி நம்மை அதன் சூழலில் இருந்து ஒதுக்கி கடைசியில் நம்மை இதில் வாழ்ந்த சுவடு தெரியாமல் மறைய வைத்து விடுகிறது. அதைவிட மறைந்து போன பின்னும் நம்மை ஞாபகம் வைத்து கொண்டிருக்கும் ஒரு சில உறவுகளும் கூட இதே போல மறைந்த பின் நாம் இந்த பூமியில் வாழ்ந்திருந்தோமா? என்னும் நிலையில்தான் இருக்கும்.

வேடிக்கையாக கூட சொல்வார்கள், உனக்கு உங்கப்பா, உங்கம்மாவை தெரியும், அடுத்து அவர்களின் பெற்றோர்களை தெரியும், அடுத்து கொஞ்சம் முயற்சி செய்பவர்களுக்கு அவர்களின் பெற்றோர்கள் தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கலாம், ஆனால் அவர்களோட பெற்றோர்கள்?

கண்டிப்பாய் வாய்ப்பே இல்லை, இதுதான் காலத்தின் வேலை என்பது.

ஆனால் இத்தனை நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று கொண்டிருந்தாலும் நாம் மனதறிய இந்த வாழ்க்கை என்பது கடந்து போக கூடியது என்பதை பெரும்பாலானவர்கள் நம்ப மறுக்கிறோம். நமக்கு வரும் இன்பங்கள் துயரங்கள் எல்லாமே நிரந்தர்மோ, என்னும் எண்ணத்துக்குள் ஆழ்ந்து விடுகிறோம். இந்த பூமியில் அனுபவிக்கும் யாவையும் நமக்கு நிரந்தரமானது என்னும் எண்ணம் எப்படியோ மனதுக்குள் புகுந்து விடுகிறது.

அதே போலத்தான் நம்முடன் அறிமுகமானவரோ, உடன் பிறந்தவர் களோ, நம்மை விட்டு மறையும் போது நாமும் அடுத்து இதே நிலைதான் என்பதை உணர்வதற்கு முடிவதில்லை.

இது மனிதர்களின் குற்றமாக தெரியவில்லை. காரணம் இந்த பூமி நமக்கு அளிக்கும் பூரண நம்பிக்கை அப்படிப்பட்டது. அதிலும் மனித இனங்களுக்கு ஆறாவது அறிவு என்னும் ஒன்றை கொடுத்து உணர்தல், அறிதல், பகுத்தல், இப்படி பல வகை உணர்வுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும்போது நம்மால் "நான் நிரந்தரமில்லாதவன்" என்னும் எண்ணம் எங்கனம் உருவாகும்?

நாம் பிறந்த பூமியை விட்டு பிழைப்புக்காகவோ, வாழ்வுக்காகவோ வேறு எங்கோ சென்று விட்டு மீண்டும் நாம் பிறந்த மண்ணை நோக்கி வரும்போது நம்மில் தோன்றும் உணர்வுகள் அற்புதமானவை அல்லவா?

எல்லாமே புதிதாக பார்ப்பது போல், அதே போல் நாம் சிறுவயதில் அன்று அனுபவித்த ஒரு சில பழைய நினைவுகள் நம் மனதுக்குள் நிழலாட நம்மை 'உணர்ச்சி குவியலில்' திக்கு முக்காட வைக்கிறது.

ஆனால் உண்மையில் என்ன நடக்கிறது? நாம் பிறந்த இடம், மண் எப்பொழுதும், தங்களை மாற்றி கொள்வதில்லை. மனித உணர்வுகளை கொண்ட நாம் தான் நம்முடைய எண்ணங்களில் எங்கு போய் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ அந்த சூழ்நிலைக்குள் பதிந்து கொள்கிறோம். மீண்டும் நாம் பிறந்த இடத்துக்குள் நுழையும் போது பதிந்து போன அந்த சூழ்நிலைகள் தெளிவடைந்து பழைய பதிந்து போன 'பால்யகால' நினைவுகளாக நம் எண்ணத்துக்குள் புகுந்து நம்மை உணர்ச்சி குவியலாக்குகின்றன.

இயற்கை எப்பொழுது நம்மை விட்டு பிரிந்து விட்டதற்காக வருத்தப்படவோ அல்லது மீண்டும் அங்கு வந்து விட்டால் மகிழ்ச்சி கொள்வதோ இல்லை. அது வழக்கம் போல இரவு பகல், வெயில், மழை என்று மாறி மாறி வலம் வந்து கொண்டுதான் இருக்கிறது.

இதில் மனித வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ளும் இடமும், வசதி வாய்ப்புகளும் நம்மை பிறந்த இடத்தில் சற்று வேறுபாடாய் மற்றவர்களுக்கு காட்டுகிறது. அவ்வளவுதான்.

இப்படியும் கூட எடுத்து கொள்ளலாம், "காலம்" என்பது எதற்கும் கட்டுபடாதது. காரணம் பூமி முதற்கொண்டு எங்கெங்கு இனங்கள், அது எந்த வகை உயிரினங்களாக இருந்தாலும், வாழ்ந்து கொண்டிருக்கும் கோள்கள் அது பூமியை போலவே இருந்தாலும் அனைத்துமே காலத்தின் கட்டுப்பாட்டுக்குள் தான் சூரியனை சுற்றியபடி சுழன்று கொண்டிருக்கின்றன.

இன்று குழந்தையாய் பிறந்தால் வருடங்கள் செல்ல செல்ல நாம் வயதாகி மறைந்து போகத்தான் வேண்டும். இது காலத்தின் கணக்கு. அது எந்த உயிரினமாக இருந்தாலும் சரிதான்.

இந்த கருத்து அல்லது கட்டுரை மனித வாழ்க்கையை பற்றிய சோர்வை தரலாம். எதுவுமே நிரந்தரமில்லை எனும்போது வாழ்க்கை என்பது ஏது? என்று. ஆனல் காலம் அதற்கும் வழிமுறைகளை செய்து விட்டுத்தான் சென்று கொண்டிருக்கிறது. மனிதர்களோ அல்லது எத்தகைய உயிர்களோ அவற்றின் மூலக்கூறுகளை அடுத்த தலைமுறைக்கும் கடத்தி கொண்டுதான் இருக்கிறது.

அடுத்து அனுபவங்களை ஒருத்தர் மற்றவர்களுக்கு கடத்தியபடியேதான் வாழ்ந்து மறைந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் தாங்கள் இந்த பூமியில் வாழ்ந்து மறைந்து போவிவிட்டாலும் தொடர்ந்து வரும் மனித உறவுகளுக்கு அறிமுகப்படுத்தி கொள்ள தங்களது படைப்புக்களை அளித்து விட்டும் செல்கிறார்கள். இத்தகைய படைப்புக்கள் அவர்களுக்கு பின்பும் அவர்களை பற்றிய உணர்களை வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு எடுத்து காட்டியபடி காலத்தோடு நகர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

அதனால் மனித வாழ்க்கை நிரந்தரமில்லை என்பது எந்த அளவுக்கு அறிவியல் பூர்வமான உண்மையோ அதை விட அவர்கள் வாழ்ந்த போது சாதிக்கும் அல்லது படைக்கும் எல்லா அதிசயங்களும் வரும் தலைமுறை கால மனிதர்களோடு வாழ்ந்து கொண்டு அவர்களுக்கு உங்களை நினைவுபடுத்தி கொண்டுதான் இருக்கும்.

காலம் வேகமாக ஓடினாலும் நாம் அதனுடனே ஓடி சட்டென ஒரு இடத்தில் நம்முடைய பதிவை அல்லது படைப்பை படைத்து விட்டு அதன் பின் நகர்ந்து போகலாமே..!



நாம் இருக்கும் இந்த 'பூமி' பிறக்கும் போது நமக்கு புதிதாக தோன்றி நாட்கள் செல்ல, அறிமுகமான ஒட்டி உறவாடக் கூடியதான சூழ்நிலைக்கு கொண்டு வந்து அதே பூமி நம்மை அதன் சூழலில் இருந்து ஒதுக்கி கடைசியில் நம்மை இதில் வாழ்ந்த சுவடு தெரியாமல் மறைய வைத்து விடுகிறது. அதைவிட மறைந்து போன பின்னும் நம்மை ஞாபகம் வைத்து கொண்டிருக்கும் ஒரு சில உறவுகளும் கூட இதே போல மறைந்த பின் நாம் இந்த பூமியில் வாழ்ந்திருந்தோமா? என்னும் நிலையில்தான் இருக்கும்.



# போராடத் தயார்

## டிரம்பின் பரஸ்பர வரி விதிப்பிற்கு உலகத் தலைவர்கள் எதிர்ப்பு

அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்த இறக்குமதி வரி குறித்து, உலக தலைவர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர். அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பதவி ஏற்ற முதல் நாளிலிருந்து பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். தற்போது அவர் பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி விகித்தை அறிவித்தார். இதில் 15 நாடுகளுக்கு எவ்வளவு சதவீத வரி என்பது குறித்த பட்டியல் வெளியாகியுள்ளது. இந்திய பொருட்களுக்கு 26 சதவீத இறக்குமதி வரி விதித்துள்ளார். இது குறித்து உலக தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு:

**கனடா பிரதமர் மார்க் கார்னி**

அதிபர் டிரம்பின் வரி விதிப்பிற்கு எதிராக போராடுவோம். எக்கு, அலுமினியம் மற்றும் ஆட்டோமொபைல்களுக்கான இறக்குமதி வரி, கோடிக்கணக்கான கனடா மக்களை நேரடியாக பாதிக்கும். இந்த வரி விதிப்பிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

**பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர்**

வர்த்தகப் போரை எதிர்த்து போராட தயாராகி விட்டோம். நாங்கள் எதையும் சமாளிப்போம்.

**ஸ்பெயின் பிரதமர், பெட்ரோ சான்செஸ்**

எங்கள் நாடு தொழிலாளர்கள் நலனில் மிகுந்த அக்கறை செலுத்தும். தொழிலாளர்களை பாதுகாக்கும். உலகத்திற்காக தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்.

**சுவீடன் பிரதமர், உல்ப் கிறிஸ்டர்சன்**

நாங்கள் ஒரு வர்த்தகப் போரை விரும்பவில்லை. அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். எங்கள் நாடுகளில் உள்ள மக்கள் சிறந்த வாழ்க்கையை வாழ விரும்புகிறோம்.

**இத்தாலி பிரதமர் மெலோனி**

வரத்தக போரை தவிர்க்க வேண்டும். அதிபர் டிரம்புடன் இணைந்து பணியாற்றுவோம். அமெரிக்காவுடன் இணைந்து எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

பொருளாதாரத்தை பலவீனப்படுத்தும் வர்த்தகப் போரைத் தவிர்க்க விரும்புகிறோம்.

**ஆஸ்திரேலியா பிரதமர் ஆன்டனி அல்பனீஸ்**

இது ஒரு நண்பரின் செயல் அல்ல. தனது நாடு பதில் வரி விதித்து பழிவாங்காது.

ஆஸ்திரேலியா அமெரிக்க பொருட்கள் இறக்குமதிகளுக்கு எந்த வரியும் வசூலிக்கவில்லை. இந்த வரிகள் எதிர்பாராதவை அல்ல. ஆனால் நான் தெளிவாகச் சொல்கிறேன். அவை முற்றிலும் தேவையற்றவை. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா ஆஸ்திரேலியாவின் வலிமையான இராணுவ நட்பு நாடாக இருந்து வருகிறது. எங்கள் அரசாங்கம் எப்போதும் ஆஸ்திரேலிய மக்களுக்கு ஆதரவாக இருக்கும். (ஐ)

## பாக். அதிபர் ஆசிப்அலி சர்தாரிக்கு திடீர் உடல்நலக்குறைவு

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி உடல்நிலை கோளாறு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதிபர் ஆசிப் அலி சர்தாரி (69) ரம்ஜான் தொழுகைக்காக கராச்சியில் இருந்து 300 கி.மீ.,தொலைவில் உள்ள நவாப் ஷா என்ற பகுதிக்கு சில நாட்கள் முன்பு சென்றிருக்கிறார். அதன் பின்னர், அவர் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனையும் நடத்தி உள்ளார்.

இந் நிலையில், சர்தாரிக்கு திடீரென காய்ச்சல் மற்றும் தொற்று உபாதை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் நவாப்ஷாவில் இருந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளார்.

மருத்துவமனையில் சர்தாரிக்கு பல்வேறு கட்ட மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவரது உடல்நிலையை மருத்துவர்கள் குழு தீவிரமாக கண்காணித்து வருகிறது. சர்தாரியின் உடல்நிலை குறித்து பிரதமர் ஷெபாஸ் ஷெரிப் மருத்துவர்களிடம் கேட்டறிந்துள்ளார். (ஐ)



## எந்தெந்த நாடுகளுக்கு எவ்வளவு சதவீதம் வரி: அறிவித்தார் டிரம்ப்




அமெரிக்க அதிபர் டிரம்ப் பல்வேறு நாடுகளில் இறக்குமதிக்கான வரி விகித்தை அறிவித்தார். இதில் 15 நாடுகளுக்கு எவ்வளவு சதவீத வரி என்பது குறித்த பட்டியல் வெளியாகியுள்ளது. இந்திய பொருட்களுக்கு 26 சதவீத இறக்குமதி வரி விதித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் பதவி ஏற்ற முதல் நாளிலிருந்து பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். இதற்கிடையே, அவர் இறக்குமதி வரிகளை அதிகரித்து அண்டை நாடுகளுக்கு அதிர்ச்சி கொடுத்து வருகிறார்.

அமெரிக்க பொருள்கள் மீது அதிக வரி விதிக்கும் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் பொருள்களுக்கு அமெரிக்காவும் பரஸ்பரம் அதே அளவு வரி விதிக்கும்படி வரும் ஏப்ரல் 2-ஆம் தேதி முதல் இந்த பரஸ்பர வரி விதிப்பு நடைமுறைக்கு வரும் என்று அதிபர் டிரம்ப் தெரிவித்திருந்தார்.

அதன்படி, இந்தியவில் இறக்குமதி பொருட்களுக்கு 26 சதவீத வரி விதித்துள்ளார். மேலும் ஒவ்வொரு நாடுகளும் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு வரிகளை விதித்தும், அதேபோல் பிற நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு அந்த நாடு வரிகளை விதித்து அறிவித்துள்ளார். ஆட்டோமொபைல்ஸ் மீதான வரிவிதிப்பு வருகிற 4 ம் தேதியில் இருந்து அமலுக்கு வருகிறது.

இது குறித்து ஓவல் அலுவலகத்தில் நிருபர்கள் சந்திப்பில் டிரம்ப் அறிவித்துள்ளதாவது,

இன்றைய தினத்தை அமெரிக்காவின் விடுதலை நாள். அமெரிக்காவை விட பிற நாடுகள் தான் அதிகமான வரிகளை விதிக்கின்றன. இதனால் அமெரிக்காவின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. அதோடு அங்குள்ள உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் நிதிச் சுமை ஏற்படுகிறது இதனை சரிசெய்ய வேண்டும். இதற்காக ஒவ்வொரு நாடுகளுக்கும் தனித்தனியாக கூடுதல் வரி என்பது விதிக்கப்படும். அமெரிக்காவின் பொருட்களுக்கு விதிக்கப்படும் வரியை போல் அதற்கு நிகராக பிற நாடுகளுக்கு அமெரிக்காவும் வரி விதிக்கும் இவ்வாறு டிரம்ப் கூறினார். டிரம்பின் இந்த நடவடிக்கையால் வர்த்தக போர் என்பது தொடங்கும் நிலை உருவாகி உள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி விகிதம் வருமாறு

வியட்நாம்: 46 சதவீதம்
தைவான்:32 சதவீதம்
ஜப்பான்: 24 சதவீதம்
இந்தியா: 26 சதவீதம்
தென்கொரியா: 25 சதவீதம்
தாய்லாந்து: 26 சதவீதம்
சுவிட்சர்லாந்து: 31சதவீதம்
இந்தோனோஷியா: 32 சதவீதம்
மலேஷியா: 24 சதவீதம்
கம்போடியா: 49 சதவீதம்
பிரிட்டன்: 10 சதவீதம்
தென்ஆப்ரிக்கா: 30 சதவீதம்
பிரேசில்: 10 சதவீதம்
வங்கதேசம்: 37 சதவீதம்
சிங்கப்பூர்: 10 சதவீதம்
இஸ்ரேல்: 17 சதவீதம்
பிலிப்பைன்ஸ் 17 சதவீதம்
சீலி: 10 சதவீதம்
ஆஸ்திரேலியா: 10 சதவீதம்
பாகிஸ்தான்: 29 சதவீதம்
துருக்கி: 10 சதவீதம்
இலங்கை: 44 சதவீதம்
கொலம்பியா : 10 சதவீதம்
பெரு: 10 சதவீதம்
நிகரகுவா:36 சதவீதம்
நார்வே: 30 சதவீதம்
கோஸ்டாரிகா: 17 சதவீதம்
ஜோர்டான்: 40 சவீதம்
டொமினிக் குடியரசு: 10 சதவீதம்
யு.ஏ.இ.: 10 சதவீதம்
நியூசிலாந்து : 20 சதவீம்
அர்ஜென்டினா: 10 சதவீதம்
ஈகுவாடர்: 12 சதவீதம்
கவுமேலா: 10 சதவீதம்
ஹோண்டுரஸ்: 10 சதவீதம்
மடாகஸ்கர்: 93 சதவீதம்
மியாமனர்: 88 சதவீதம்
துனீஷிய: 55 சதவீதம்
கஜகஸ்தான்: 54 சதவீதம்
செர்பியா- 74 சதவீதம்
எகிப்து: 10 சதவீதம்
சவுதி அரேபியா-10 சதவீதம்
எல்சல்வாடார்: 10 சதவீதம்

**இலங்கைத்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2.00 மணிக்கு யாழ்ப்பாணம் - நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கட்சியின் பதில் தலைவரும், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமாகிய சி.வி.கே சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் உள்ள யாழ். மாநகர சபை, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய நகரசபைகள் மற்றும் 13 பிரதேச சபைகள் அடங்கலாகப் 17 உள்ளூராட்சி சபைகளுக்காகப் போட்டியிடும் 453 வேட்பாளர்கள் இன்று அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளனர். இவர்களில் 24 பேர் நேரடியாக வட்டார வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர். 210 பேர் விகிதாசாரப் பட்டியல் மூலமாகப் பட்டியலிடப்பட்டுள்ளனர்.

**வடக்கு....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"போர் என்பது துரதிஷ்டவசமானது. போர் நடைபெற்றமை தொடர்பில் நான் இன்றளவிலும் கவலைப்படுகின்றேன். 'போர் வெற்றி' என்ற வார்த்தையை எமது கட்சியினர் பயன்படுத்துவதில்லை. 'போர் முடிந்த பின்னர்' என்ற வசனத்தைதான் பாவிப்போம்.

இரு இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்பட்டன. இதன்போது, அவர்கள் (புலிகள்) ஏன் போராளிகளாக மாறினார்கள் என்பது தொடர்பில் நாங்கள் ஆராய வேண்டும். இதற்கு 1976ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதிகளையும் நாங்கள் கருத்தில் எடுக்க வேண்டும். பல வருடங்களாக தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் காரணமாகத்தான் வடக்கு இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்.

எனவே, மீண்டும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் இருப்பது தொடர்பிலேயே தற்போது நாம் அவதானம் செலுத்த வேண்டும். ஏற்பட்ட வடுக்களை எவ்வாறு ஆற்றுவது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தச் செயற்பாடுகளை நாங்கள் ஆரம்பித்திருக்க வேண்டும். போர் வெற்றியை கொண்டாடுவதற்குப் பதிலாக, உயிரிழந்த அனைவரையும் நினைவுகூர்ந்திருக்க வேண்டும்." - என்றார்.

**தேசபந்து...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றில் இன்று ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி மாத்தறை - வெலிகம, பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், தேசபந்து தென்னக்கோன் நீதிமன்ற உத்தரவை அவமதித்து சுமார் 20 நாட்கள் தலைமறைவாக இருந்த நிலையில், கடந்த 19 ஆம் திகதி காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்துத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கடற்றொழில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பாரதப் பிரதமர் நரேந்திர மோடியிடம் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினையைத் தீர்க்குமாறு வலியுறுத்தக் கோரி குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பருத்தித்துறை...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு சில மரக்கறி வர்த்தகர்கள் புதிய சந்தை கட்டத் தொகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

புதிய சந்தைக்கு மரக்கறி வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு சில மாதங்களுக்கு முன்னர் பருத்தித்துறை நகர சபையால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதனை எதிர்த்து மரக்கறி வர்த்தகர்களால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கு எதிர்வரும் 20ஃ06ஃ2025 ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே பருத்தித்துறை நகர சபை நேற்று திடீரென அறிவித்தல் சுவரொட்டி மூலமும் ஒலிபெருக்கி மூலமும் மரக்கறி சந்தையைப் புதிய கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யுமாறு அறிவித்திருந்தது.

இதனால் அதிகமான மரக்கறி வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளிலிருந்து விலகியிருப்பதுடன் ஒரு சில வர்த்தகர்கள் புதிய கட்டடத் தொகுதியில் வியாபாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

புதிய மரக்கறி சந்தை அமைந்துள்ள பகுதி தற்போது வரை இயங்கி வந்த சந்தையிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் உள்ளது. அது ஒரு ஒருவழிப்பாதை என்பதால் அவ்வீதியூடாக மீன் சந்தைக்குச் செல்கின்றபோது போக்குவரத்து நெரிசல், தரிப்பிட வசதி குறைவு போன்ற பிரச்சினைகளை வியாபாரிகள் எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தெ.கி பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு பெயர்கள் பரிந்துரைப்பு



இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு மூவரை பரிந்துரை செய்வதற்கான விஷேட பேரவை ஒன்றுகூடல்வியாழக்கிழமை(03) ஆம் திகதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03ஃ2023 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் கோரப்பட்டுள்ள தான் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரர்களுக்கு ஏழு அளவுகோல்களின் **(Criteria)** கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதிகூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரை தெரிவு செய்தனர்.

இதன் அடிப்படையில் முதலாவது பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன் இரண்டாவதாக பேராசிரியர் ஏ.எம். றஸ்மி மூன்றாவதாக கலாநிதி யூ.எல். செயினுடீன் ஆகியோர் அதிக புள்ளிகள் அடிப்படையில் பேரவையால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தராக பணியாற்றிய பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் முதலாவது பதவிக்காலம் கடந்த 2024.08.09 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ.எம். நௌபர் விண்ணப்பங்களுக்கான அழைப்பை கடந்த 2024.02.08 ஆம் திகதி விடுத்திருந்தார்.

அதன் அடிப்படையில் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன், பேராசிரியர் எம்.வி.எம். இஸ்மாயில், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக் மற்றும் கலாநிதி ஏ.சி.எம். ஹனஸ் உள்ளிட்ட ஏழு பேர் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் இருந்து அப்போதைய பேரவை பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப் ஆகியோரை ஜனாதிபதிக்கு சிபார்சு செய்திருந்தது. இருந்தபோதும் அரசியல் மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் நியமனங்கள் வழங்கப்படாது பதில் உபவேந்தராக கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் நியமிக்கப்பட்டார்.

பின்னர் மீண்டும் குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்சுற்றுநிருபத்துக்கமைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் விண்ணப்பங்களுக்கான அழைப்பை கடந்த பெப்ரவரி 06 ஆம் திகதி விடுத்திருந்தார். அதற்கமைய மார்ச் 06 ஆம் திகதி, 3.00 மணி வரை ஒன்பது பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அதன் அடிப்படையில்,கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எம்.ஐ.எஸ். சபீனா, பேராசிரியர் எஸ். எம். ஜுனைடீன், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக், பேராசிரியர் ஏ.ஜெளபர் மற்றும் கலாநிதி யூ.எல். செயினுடீன் உள்ளிட்ட ஒன்பது பேர் விண்ணப்பித்திருந்தனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு இம்முறையும் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாத்திரமே விண்ணப்பித்திருந்தனர். பல்கலைக்கழகத்திற்கு வெளியேயிருந்து எவரும் விண்ணப்பிக்கவில்லை. இன்று தெரிவு செய்யப்பட்டுள்ள மூவரில் ஒருவரை ஜனாதிபதி உபவேந்தராக நியமிப்பார்.

(ஐ)

# கச்சத்தீவு இலங்கைக்குரியதாகும்




*"கச்சத்தீவு பிரச்சினையை வைத்து தமிழகத்தில் வாக்கு வேட்டை அரசியல் நடத்தப்பட்டு வருகின்றது. எது எப்படி இருந்தாலும் கச்சத்தீவென்பது இலங்கைக்குரியதாகும்." என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.*

*பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் மற்றும் கச்சத்தீவு பிரச்சினை என்பன தொடர்பில் யாழில் இன்று (03) ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.*

*'தமிழகத்தில் தேர்தல் வருவதாக இருந்தால், அதனோடு சேர்ந்து கச்சத்தீவு பிரச்சினையும் வந்துவிடும். அதேபோல தேர்தல் பிரசாரத்தில் அது பேசு பொருளாக மாறும். கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலங்களிலும் இது பற்றி பேசப்பட்டது. தற்போது முதல்வர் மு.கா. ஸ்டாலினும் அவ்வழியை கையாண்டுள்ளார். ஆனால் கச்சத்தீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதை சர்வதேசம் கூட அங்கீகரித்துள்ளது." எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். எனவே, தமிழகத்தில் தேர்தலுக்கு வேண்டுமானாலும் கச்சத்தீவு பிரச்சினையை வைத்து விளையாடலாம். அது இலங்கைக்குரியது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.*

*அதேவேளை, தமிழக மீனவர்களிடமிருந்து பெறப்பட்ட அரசுடமையாக்கப்பட்டுள்ள கப்பல்களை ஆழ்கடலில் மூழ்கடிப்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. அதன் பயன்பாடு தொடர்பில் ஆராயப்பட்டுவருகின்றது எனவும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குறிப்பிட்டார்.*

*அத்துடன், பாரத பிரதமர் மோடியின் வருகை என்பது மீனவர்களுக்கான வருகை அல்ல. 13 ஆவது திருத்தத்துக்கான வருகையும் அல்ல. அவ்வாறு கூறிக்கொண்டு வேண்டுமானால் இங்குள்ள தமிழ்க் கட்சிகள் சுய திருப்தி அடையக்கூடும்." எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.*

*(ஐ)*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.04.2025இல் வெளியிடப்பெற்றது.